கண்டி
# இலக்கிய செய்தி மடல் 1

ஆசிரியர்:– இரா. அ. இராமன் – துணை ஆசிரியர் இக்பால் அலி

மாத இதழ் **15 . 11. 1996** அன்பளிப்பு ரூபா 5.00

## போரும் சமாதானமும்

(கவிஞர் மலைத்தம்பி)

யுத்தத்துக்கு பின் ஏற்படும் சமாதானமே கொடியது என்று எழுதினார் அரசியல் ஆய்வாளர் வே. சாமிநாதசர்மா. இக்கூற்று எவ்வளவு உண்மை என்பதை முதலாம், இரண்டாம் உலக யுத்தங்கள் ஒப்புவித்துள்ளன. யுத்தத்தை ஆதரிப்போரும் ஊக்குவிப்போரும் யுத்தத்தின் முடிவில் ஏற்படும் இழப்புகளைப் பற்றி எண்ணிப்பார்த்ததாக வரலாறு இல்லை.

அதுவும் ஒரு ஜனநாயக நாட்டில் அபிவிருத்தியை எதிர் நோக்கிக் கொண்டிருக்கின்ற நாட்டில் யுத்தம் என்பது பொருளாதார வீழ்ச்சியையே ஏற்படுத்தும். வீட்டைக் கட்டி முடிப்பது இலகுவான விடயம் அல்ல, உடைத்து விடுவதோ ஒரே நொடியில் முடியும் விடயமாகும்.

யுத்தத்தில் எதிரிகளின் மனமும், பலவீனமும் முக்கியமாக எண்ணத் தக்கனவாகும். அப்படி இல்லாமல் யுத்தத்தில் ஈடுபடுவது அழிவையே ஏற்படுத்தும். வெற்றி யாருக்கு என்பதல்ல, விளைவு என்ன? என்று பார்ப்பதே அறிவுடைமையாகும்.

எந்த நாடும் மக்களது மகத்தான சக்தி அடிப்படையிலேயே முன்னேற்றம் காணமுடியும். மக்களுக்கு மத்தியில் பிணக்கும், பேதமும், பிரிவினையும் ஏற்படுமானால் அந்நாடு நாளுக்கு நாள் நலிவடைவது தவிர்க்க முடியாத ஒன்றாகும். அமைதி அழிந்தால் புரட்சியே வெடிக்கும் என்பதற்கு பல நாடுகள் உதாரணமாக விளங்குகின்றன.

யுத்தம் கொடியது, யுத்தத்தைவிட யுத்தத்திற்குப்பின் ஏற்படும் சமாதானமே கொடியது. முன்னேற்றம் என்பது யுத்தத்தின் மூலம் ஏற்படுவது அல்ல, அழிவே ஏற்படும் என்பது ஹிட்லர் தொடுத்த யுத்தம் சான்றாகும். அதனால் ஜெர்மன் குறிப்பாக யூத இனமே அழிந்தது.

உலக அரங்கில் ஜெர்மன் படைத்த சாதனை, சரித்திரம் அழிந்தது. மகோனந்த கலைச்செல்வங்கள் அழிந்தன.

எனவே ஆக்கத்திற்காக பயன்பட வேண்டிய விஞ்ஞான வளர்ச்சி இன்று அழிவுக்கு பயன்படுகின்றதென்றால் ஆக்கிரமிப்பு எண்ணங்களே காரணமெனலாம்.

மனித குலம் மேன்மையுற வேண்டுமானால் ஒவ்வொரு நாடும் அபிவிருத்தியடைய வேண்டும். மனிதனை மனிதன் அழிக்கும் எண்ணம் எவருக்கும் ஏற்படக் கூடாது.

போட்டி தவிர்ப்பும், சமாதான எண்ணமும், மனிதர் யாவரும் சமமென்ற கொள்கை உலக முழுமையும் உருவாக வேண்டும்.

போர் தொடுப்பது பெரிதல்ல சமாதானமே பெரிது. போருக்கு பின் ஏற்படும் அமைதி மரண அமைதியாகும், நிம்மதி தரும் அமைதியாக அமையாது.

**வாழ்த்து**

மக்கள் கலை இலக்கிய ஒன்றியத்தின் இலக்கிய பணிகளில் இன்னுமொரு இலக்கிய மலர் பூத்துள்ளது. தலைவர் இரா.அ.இராமனின் இலக்கியப்பணிகளை மனந் திறந்து பாராட்டுகிறேன், வாழ்த்துகின்றேன்

சேகரன் சோமபாலன்
விற்பனை அபிவிருத்தி அதிகாரி
வீரகேசரி
199, போராதனை வீதி, கண்டி.

**பி. எம். புன்னியாமீனின்**
**புத்தம் புதிய இரு நூல்கள்**
**யாரோ எவரோ எம்மை ஆள**

தாமரை, கலைமகள், தீபம், தீ ஆகிய தமிழக சஞ்சிகைகளில் வெளிவந்த சிறு கதைகளின் தொகுப்பு. எட்டு சிறு கதைகள் பக்கங்கள் 120 விலை ரூபா 65.

**பாலம் கவிதைத் தொகுதி**

இளம் கவிஞர்கள் ஐவரின் கவிதைகள் அடங்கிய அருமையான கவிதைத் தொகுதி இது. விலை ரூபா 50.

தொடர்புகளுக்கு சிந்தனை வட்டம்
14, உடத்தலவின்னை மடிகே–1212.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டி இலக்கிய மடல்

நூறு மலர்கள் மலரட்டும்
நாறும் கீழ்மைகள் தகரட்டும்

தொடர்புகளுக்கு
ஆசிரியர்
18/13, பூரணவத்தை
கண்டி

15 - 11 - 1996

## ஆசிரியர் உரை

வாசிப்பது ஒருவனின்
கடமையாகின்றது.
அது அவனை முழுமனிதனாக
மாற்றும் சக்தி கொண்டது.
ஒரு மனிதனை வாசிக்க
தூண்டுவதே
ஒரு சமூகப் பணியாகும்.
அவனை எப்படி
வாசிக்கத் தூண்டுவது?
வாசிக்கும் உணர்வை
எப்படி ஏற்படுத்துவது?
அதன் விளைவே
இச்சிறு பத்திரிகை.
அத்துடன் கண்டி இலக்கியச் செய்திகளை,
கண்டியிலிருந்து வெளிவரும்
நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகளை
வெளிச்சம் போட்டு காட்டி
வாசகர்களின் பார்வைக்கு
வழி சமைப்பது,
அத்தோடு
கண்டி எழுத்தாளர்கள், கலைஞர்கள்,
கலை இலக்கிய ஆர்வலர்கள்,
கலை இலக்கிய காவலர்கள்,
மற்றும் இலக்கியத்திற்காக
தங்களை அர்ப்பணித்தவர்கள் இவர்களை
கோடிட்டுக் காட்டும்
கண்டி இலக்கிய செய்தி மடல்.
ஆகவே
வாசகர்கள் இச்சிறு பத்திரிகை
தொடர்ந்து வெளிவந்து
இலக்கிய பணியாற்ற
உங்களின் நேசக் கரங்களை
நீட்டுமாறு வேண்டுகின்றேன்.

இரா. அ. இராமன்
ஆசிரியர்

வெகு விரைவில் உங்கள் கரங்களில்
இக்பால் அலியின்
"முற்றத்திற்கு வாருங்கள்"
கவிதைத் தொகுதி.
இது ஒரு மக்கள் கலை இலக்கிய
ஒன்றியத்தின் வெளியீடு.

# கண்டி இலக்கிய களம்

### முஸ்லிம் நேசன் வெளியீட்டு விழா

எழுத்தாளரும், பத்திரிகையாளரும் எல்லோருக்கும் இனியவருமான நண்பர் ஐ.ஏ.றசாக் அவர்களை ஆசிரியராகக் கொண்ட முஸ்லிம் நேசன் மாத இதழ் கண்டி ஒரோபி பாஷா மண்டபத்தில் பேராதனைப்பல்கலைக்கழக மெய்யியல் துறை விரிவுரையாளர் எம். எஸ். எம். அனஸ் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவில் எழுத்தாளர்கள், இலக்கிய ஆர்வலர்கள், வர்த்தகர்கள் கலந்து கொண்டனர்.

### ஏணியும் தோணியும் வெளியீட்டு விழா

மக்கள் கலை இலக்கிய ஒன்றியத்தின் ஏற்பாட்டில் கண்டி சிட்டிமிசன் மண்டபத்தில் 28.09.96 அன்று கலாநிதி துரை. மனோகரன் அவர்களின் தலைமையில் ரூபராணி ஜோசப்பின் ஏணியும் தோணியும் உருவகக் கதை நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது. இவ்விழாவில் மாண்புமிகு அமைச்சர் பெ. சந்திரசேகரன் அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

### மானா மக்கின் அவர்களின் மூன்று நூல்களின் அறிமுக விழா

தமிழ் மணி மானா மக்கின் அவர்களின் பேனா முனையில் அரை நூற்றாண்டு, முஸ்லிம் டைஜஸ்ட், என்னைக் கேளுங்கோ நூல்களின் அறிமுக விழா கண்டி டி. எஸ். சேனாநாயக்க பொது நூல் நிலைய மண்டபத்தில் மட்டுநகர் முதல்வர் கௌரவ செழியன் பேரின்பநாயகம் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. அரசியல்வாதிகள், இலக்கியவாதிகள், வர்த்தகர்கள், மாணவ மாணவிகள் நிறைந்து காணப்பட்ட இவ்விழாவில் மானா மக்கினின் நான்கு அம்சங்கள் என் நெஞ்சை தொட்டன. ஒன்று கண்டியிலிருந்து வெளிவரும் அகிலம் சஞ்சிகை ஆசிரியர் கே. வி. இராமசாமி அவர்களுக்கும், முஸ்லிம் நேசன் ஆசிரியர் ஐ. ஏ. றசாக் அவர்களுக்கும் பண முடிப்பு வழங்கியது. இரண்டு இரு இலக்கியவாதிகளை கௌரவித்தமை. மூன்று விழாவில் தமிழ் அன்னைக்கு வழங்கிய கௌரவம். நான்கு 135 ரூபா பெறுமதி கொண்ட மூன்று நூல்களுக்கும் வாசகர்களிடமிருந்து 100 ரூபா மட்டும் பெற்றுக் கொண்டமை. வாழ்க மானா, வளர்க அவரது தமிழ்ப் பணி

– ஆசிரியர்

### கண்டியிலிருந்து எழுதும் பத்திரிகையாளர்கள்

திரு. க. ப. சிவம் – வீரகேசரி
திரு. ஐ. ஏ. றசாக் – தினகரன்
திரு. எம். எஸ். குவால்தீன் – வீரகேசரி
திரு. எச். எம். மன்சூர் – தினகரன்
திரு. ஆர். மகேஸ்வரன் – தினகரன்
திரு. முத்துசம்பந்தர் – சூடாமணி

விரைவில் உங்கள் கரங்களில்
**அவள் ஒரு தனிமரமல்ல**
சிறுகதைத் தொகுதி
ஆசிரியை:– திருமதி. நளாயினி சுப்பையா.

### விரைவில் எதிர்பாருங்கள்

வைகறை காலாண்டு
இலக்கிய சஞ்சிகை
ஆசிரியர்
– இரா. அ. இராமன்

மண்ணின் மக்களுக்குத்தான் மண்ணின் மனம் தெரியும் மலையகத்தை பிறப்பிடமாகக் கொள்ளாத டாக்டர் நந்திக்கும், புலோலியூர் சதாசிவத்திற்கும், தி. ஞானசேகரத்திற்கும், யோ.பெனடிக்ற் பாலனுக்கும் மலையக மண்ணின் மனம் கை வந்திருக்கிறதென்றால் அவர்கள் அந்த மண்ணின் மணம் தெரியும் வரை அந்த மண்ணின் மக்களோடு இரண்டற கலந்து இருந்திருக்கின்றார்கள்.
–தெளிவத்த ஜோசப்

### சிறுகதைகள் அடங்கிய ஒலிப்பேழை வெளியீடு

மக்கள் கலை இலக்கிய ஒன்றியத்தின் வெளியீடாக அக்குரணை இளைய அப்துல்லாவின் சிறுகதை அடங்கிய ஒலிப்பேழை (கெசட்) வெளியீட்டு விழா விரைவில் கண்டியில் நடைபெறும். மலையகத்தில் இது ஒரு புதிய முயற்சியே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டு விழா

மக்கள் கலை இலக்கிய ஒன்றியத்தின் ஏற்பாட்டில் தொழில் அதிபரும், சமூக தொண்டருமான லக்கிலேண்ட் எஸ். முத்தையா ஜே. பி. அவர்களின் தலைமையில் மலையகத்தின் மூத்த கவிஞர்களுள் ஒருவரான மலைத்தம்பிக்கு பாராட்டு விழா ஒன்றை நடாத்தவும் அன்னாருக்கு பொற்கிழி வழங்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. நண்பர்கள், அன்பர்கள், அறிஞர்கள், பெரியார்கள், தொழில் அதிபர்கள் தங்களால் முடிந்தத் தொகையினை அனுப்பி அந்த ஏழைக் கவிஞனின் வாழ்க்கையை மேம்படுத்த உதவிக் கரம் நீட்டுமாறு வேண்டுகின்றோம். உதவிகளை அனுப்ப வேண்டிய முகவரி.

திரு எஸ். முத்தையா ஜே. பி.
லக்கிலேண்ட் பிஸ்கட்
நத்தராம்பொத்த குண்டசாலை.

## திரு பி. எம். புன்னியாமீன் அவர்களின் இலக்கியப் படைப்புக்கள்

**சிறு கதைத் தொகுதி**

1.-தேவைகள் 2.-நிழலின் அருமை
3.-கரு 4.-நெருடல்கள் 5.-அந்த நிலை
6.- யாரோ எவரோ எம்மை ஆள......

**கவிதைத் தொகுதி**

1.-புதிய மொட்டுக்கள் 2.-அரும்புகள்
3.-பாலங்கள்

**திறனாய்வு**

1.-இலக்கிய விருந்து 2.-இலக்கிய உலா
3.-94 சனாதிபதி தேர்தலும்,சிறுபான்மையோரும்
4.-94 பொதுத் தேர்தலும் சிறுபான்மையோரும்

**நாவல்**

அடிவானத்து ஒளிர்வுகள்

**வரலாறு**

கிராமத்தில் ஒரு தீபம்

## கண்டியிலிருந்து வெளிவரும் பிரசுரங்கள்

**அகிலம்**

ஆசிரியர்:- கே. வி. இராமசாமி
முகவரி திருகோணமலை வீதி கண்டி
விலை ரூபா 20.

**முஸ்லிம் நேசன்**

ஆசிரியர்:- ஐ. ஏ. றசாக்
முகவரி 24/18 காசல் ஒழுங்கை கண்டி

## வாழ்த்துகின்றோம்

கொடுக்கும் கரங்கள், தன்னை தேடி வந்தோரை மனநிறைவோடு அனுப்பி வைக்கும் பண்பு, கலை இலக்கியவாதிகளை மதிக்கின்றத் தன்மை தந்தையைப் போலவே பொதுப் பணிகளுக்கு உதவுகின்ற நல்ல உள்ளம், வரும் காலத்தில் தமது தந்தையின் இடத்தை நிரப்பக் கூடிய மனிதாபிமானம் கொண்டவர். ஆம் சிறீலங்கா சிகாமணி – இறை பணிச் செம்மல் நாகலிங்கம் இரத்தினசபாபதி அவர்களின் புத்திரர் மோகன் இரத்தினசபாபதி அவர்களுக்கு அண்மையில் சமாதான நீதவான் எனும் கௌரவ பதவி அளித்து அரசு கௌரவித்துள்ளது. தந்தையைப் போலவே சமூகப் பணியாற்றி சிறப்புற வேண்டுமென மக்கள் கலை இலக்கிய ஒன்றியம் மனதார வாழ்த்துகிறது.

"இரா"

## தோழர் இளங்கீரனுக்கு அஞ்சலி

இலங்கை முற்போக்கு எழுத்தாளர்களில் முன்னணி வகித்தவர் மட்டுமல்ல முற்போக்கு இலக்கியத்தின் வளர்ச்சிக்கும் இந்நாட்டில் வித்திட்டவர் அமரர் சுபைர் இளங்கீரன் ஆவார். அவர் எழுதிய "நீதியே நீ கேள்" என்ற நாவல் தான் அவரை இலக்கிய உலகுக்கு அறிமுகப்படுத்தியது எனலாம். "ஈழத்தின் இரு மொழிகள்" என்ற நூல் இன்றைய மொழி பிரச்சினைக்கு பல்லாண்டுகளுக்கு முன்னரே தீர்வு தெரிவித்துள்ளதை அவதானிக்க முடிகிறது. "மரகதம்" என்ற சஞ்சிகை இலங்கையில் வெளியிடப்பட்ட முற்போக்கு இலக்கிய முயற்சிகளுக்குக் களம் அமைத்த சஞ்சிகையாகும். அன்னாரது இழப்பு இந்நாட்டு இலக்கிய துறையில் பெரும் வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ளது. இளங்கீரன் அவர்கள் வாழ்வில் பெரும் சவால்களை எதிர் நோக்கியவர் ஆவார். இலக்கியத் துறையில் அச்சவால்களின் மூலம் பல சாதனைகளை அவரால் நிலைநாட்ட முடிந்தது. அவரது இலக்கிய முயற்சிகள் காலத்தால் நிலைத்து வாழக்கூடியதாகும். அன்னாருக்கு மக்கள் கலை இலக்கிய ஒன்றியம் சிரம் தாழ்த்தி அஞ்சலி செலுத்துகின்றது.

"இரா"

## கண்டியில் இயங்கும் தமிழ் இலக்கிய அமைப்புக்கள்

மக்கள் கலை இலக்கிய ஒன்றியம்
18/13 பூரணவத்த-கண்டி.

மத்திய இலங்கை இஸ்லாமிய எழுத்தாளர் இயக்கம்
24/18, காசல் ஒழுங்கை
கண்டி.

## மக்கள் கலை இலக்கிய ஒன்றியத்தின் ஏற்பாட்டில் தொடர்

ஆய்வரங்கம்-1

முதலாவது ஆய்வரங்கம் கலாநிதி க. அருணாசலம் அவர்களின் நூல்கள் ஆய்வுக்காக எடுத்துக் கொள்ளப்படும். முதலாவது இவ்வாய்வரங்கை ஆரம்பித்து வைப்பவர்

திரு. சிவலிங்கம் பி. ஏ. (சிறப்பு)
ஆசிரியர் திரித்துக் கல்லூரி, கண்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்ல மனம் வாழ்க

### கண்டி இலக்கிய காவலர்

கலை இலக்கிய, சமூக, சமய, கல்விப் போன்றத் துறைகளுக்கு இவர் ஆற்றி வருகின்ற பணி மகத்தானது லக்கிலேண்ட் முத்தையா என நாடு முழுக்க வானொலி மூலம் ஒலிக்கின்றது. ஆம், மலையக சிறுகதைப் போட்டிக்கு பெரும் பணத்தொகையை பரிசாக (25500/=) அளித்து பலரது பாராட்டைப் பெற்றுள்ளார். இவர் சமாதான நீதவானுமாவார். மக்கள் கலை இலக்கிய ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடந்த பல விழாக்களில் இவர் அறிஞர்கள், கலைஞர்கள், எழுத்தாளர்கள் பத்திரிகையாளர்கள் போன்றோர்க்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்துள்ளார். இவர் பல்லாண்டுகள் வாழ்ந்து சேவையாற்ற மக்கள் கலை இலக்கிய ஒன்றியம் வாழ்த்துகின்றது.

## நல்ல மனம் வாழ்க

### கண்டி இலக்கிய காவலர்

கலை இலக்கிய, சமூக, சமய, கல்வி போன்றத் துறைகளுக்கு தம்மால் முடிந்த உதவிகளை செய்து வருபவர் சிறிலங்கா சிகாமணி நாகலிங்கம் இரத்தினசபாபதி அவர்கள். இவர் சிறிலங்கா சிகாமணி இறை பணிச் செம்மல் போன்ற பட்டங்களை பெற்றதோடு அகில இலங்கை சமாதான நீதவான், மத்திய மாகாண இந்துமாமன்றத் துணைத்தலைவர் போன்ற பதவிகளையும் பெற்றுள்ளார். இவர் மக்கள் கலை இலக்கிய ஒன்றியம் நடாத்திய விழாக்களில் பத்துக்கு மேற்பட்ட கலைஞர்கள், அறிஞர்கள், எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள் போன்றோர்க்குப் பொன்னாடை போர்த்தி கௌரவித்துள்ளார். இவர் பல்லாண்டுகள் வாழ்ந்து சேவையாற்ற மக்கள் கலை இலக்கிய ஒன்றியம் வாழ்த்துகின்றது.

## எமது நல் வாழ்த்துக்கள்


**பொம்பே டெக்ஸ்**

தைக்கப்பட்ட பேங்கொக், சிங்கப்பூர் ஆடைகள், பாதணிகள், மற்றும் நீங்கள் விரும்பும் ஆடை அணிகளுக்கு இன்றே விஜயம் செய்யுங்கள்

சில்வடெல் கடைத்தொகுதி
35/6, யட்டிநுவர வீதி,
கண்டி.
தொ. பே. 08-232753

இலங்கை, தமிழக இஸ்லாமிய நூல்களும், இலக்கியப் படைப்புகளும், பாடநூல்களையும், பாடசாலைக்குத் தேவையான உபகரணங்கள் பெற்றுக்கொள்ள இன்றே விஜயம் செய்யுங்கள்

**நியூமெக்ஸன் புத்தக நிலையம்**
203, டி. எஸ். சேனநாயக்க வீதி,
கண்டி.
T.P. 225682

**சுத்தமான வறுத்த அரிசி மா**
**(கையால் இடித்தது)**
உற்பத்தியாளரும் – சந்தைப்படுத்துபவர்களும்
**லட்சுமி இன்டஸ்ரீஸ்**
150/4, ராஜ வீதி,
மாத்தளை.

இலங்கை, தமிழக இலக்கியப்படைப்புகள், சஞ்சிகைகள் பாடநூல்கள் மற்றும் பாடசாலைக்குத் தேவையான உபகரணங்கள் பெற்றுக் கொள்ள இன்றே விஜயம் செய்யுங்கள்

**கலைவாணி புத்தக நிலையம்**
231 டி.எஸ். சேனாநாயக்க வீதி,
கண்டி.
T.P. 08-223196 078/71418

**கணக்கீட்டு – வணிகக் கல்வி**
ஆசிரியர்
ஐ. பி. சதாரூபன் B. Sc. (SPL. B. AD) Hons
**E. P. I.**
கண்டி

**மெமோ – டெக் கணனிகள்**
கணனி கல்வியும் – பயிற்சியும், எழுத்தமைப்பும், ரோணியோ அச்சமைப்பும் தொடர்புகளுக்கு
எஸ். மகேந்திரன் பி. எஸ். சி. ஏ. சி. டி
முகாமைத்துவப் பணிப்பாளர்
37, ஹில் வீதி – கண்டி.

உங்களுக்குத் தேவையான வெளிநாட்டு, உள்நாட்டு பாடசாலை பைகள், குடைகள், சூட்கேஸ்கள், ஜிப்கேஸ்கள், அன்பளிப்புப் பொருட்கள் மிகவும் மலிவாக பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்
**நியூ கந்துரட்ட என்டபிரைசஸ்**
60, காசல் வீதி – கண்டி

வெளிவந்துவிட்டது
**கொழுந்து**
கலை இலக்கிய சஞ்சிகை
தொடர்புகளுக்கு
நிர்வாகி
57, மஹிந்தபிளேஸ்
கொழும்பு – 6
ஆசிரியர்:– அந்தனி ஜீவா


கண்டி பூரணவத்தை 18/13ச் சேர்ந்த இரா. அ. இராமன் ஆகிய என்னால் கண்டி டி. எஸ். சேனநாயக்க வீதி இல. 302 ஆம் இலக்க அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org